தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
*******

ஆணை எண் 002/பேரூ/2023
நாள் 15.02.2023

திருமதி.C.ஜான்சிராஜம்,
வள்ளியூர்,
திருநெல்வேலி. – முறையீட்டு மனுதாரர்.

செயல் அலுவலர்,
வடக்கு வள்ளியூர் சிறப்புநிலை பேரூராட்சி,
திருநெல்வேலி மாவட்டம். – எதிர் மனுதாரர்

திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், வள்ளியூர், வீட்டுவசதி வாரியம், கதவு எண்.280–D என்ற முகவரியில் வசிக்கும் திருமதி.C.ஜான்சிராஜம் என்பவரின் 30.12.2022 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 03.01.2023 அன்று பெறப்பட்டு 002/பேரூ/2023 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், வள்ளியூர், வீட்டுவசதி வாரியம், கதவு எண்.280–D என்ற முகவரியில் வசிக்கும் திருமதி.C.ஜான்சிராஜம் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள தனது புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:–

“வடக்கு வள்ளியூர் பேரூராட்சிக்குட்பட்ட பல இலட்சத்திற்கு பெறுமான பேருந்து நிலையத்தை இடிப்பதற்கு மூன்றே முக்கால் இலட்சத்திற்கு மன்றத்தின் தீர்மானத்தில் வைக்கப்பட்டுள்ளது. அதற்கு முன்னரே 10.12.2022 அன்று இரவு 11.00 மணிக்கு பல இலட்சம் பெறுமான அனைத்து ஆஸ்பெஸ்டாஸ் கூரை மற்றும் அதில் இருந்த ஆங்கில்களை பஞ்சாயத்து நிர்வாகம் பிடுங்கி எடுத்துள்ளது. தீர்மானம் நிறைவேற்றாமல், மன்றத்தில் அனுமதி பெறாமல், வேலை அனுமதியும் பெறாமல் இவ்விதம் சட்ட விரோதமாக செயல்படும் நிர்வாக அதிகாரி மற்றும் பஞ்சாயத்து தலைவர் மீது தகுந்த நடவடிக்கை எடுத்து அரசுக்கு நிதி இழப்பு ஏற்படாமல் பாதுகாக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்” என தெரிவித்துள்ளார்.

(2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 12.01.2023 நாளிட்ட கடிதம் மூலம் வடக்கு வள்ளியூர் சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலரிடம் கோரப்பட்டது.

வடக்கு வள்ளியூர் சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலர் தனது 24.01.2023 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

“திருநெல்வேலி மாவட்டம் வடக்குவள்ளியூர் சிறப்புநிலை பேரூராட்சியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் 2021 – 2022–ன்கீழ் ரூ 12,13,00,000/– மதிப்பீட்டில் புதிய பேருந்து நிலையம் அமைக்க நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. இந்நிலையில் 1966–ஆம் ஆண்டில் கட்டப்பட்ட 56 ஆண்டு பழமைவாய்ந்த ஏற்கனவே இருந்த வணிக வளாகத்துடன் கூடிய பழைய பேருந்து நிலைய கட்டிடத்தினை இடித்து அப்புறப்படுத்த வேண்டியது அவசியம் என்பதால், அப்பணிக்கு கீழ்க்கண்டவாறு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| மதிப்பீட்டின்படி பழைய பேருந்து நிலைய கட்டிட பழைய சாமான்களான மரங்கள், ரோலிங் ஷட்டர், ரீப்பர் ஆங்கிள்கள், சாலைகள் பழைய ஆஸ்பெஸ்டாஸ் முதலியவற்றின் கிரைய தொகை | – ரூ.15,99,364/– |
| கழிக்க | |
| பழைய கட்டடத்தினை இடித்து அப்புறப்படுத்த உத்தேச மதிப்பீடு | – ரூ.12,28,707/ |
| எஞ்சிய நிகரமதிப்பு | – ரூ. 3,70,657/– |

மேற்காண் விபரப்படியான பணியில் பழைய சாமான்களின் கிரைய தொகை உட்படுத்தப்பட்டுள்ளதால் அது தொடர்பாக முறையாக விளம்பரம் செய்யப்பட்டு 08.12.2022 அன்று நடைப்பெற்ற ஏல நடவடிக்கையில் கூடுதல் ஏலம் கோரிய கன்னியாகுமரி மாவட்டம், வில்லுக்குறி பகுதியை சார்ந்த அரசு டிரேடர்ஸ் உரிமையாளர் திரு.அய்யப்பன் என்பவரது உச்ச ஏலத்தொகை ரூ 3,75,000/– அன்றைய தினமே ஏற்றுக்கொள்ளப்பட்டு உரிய ஏல பதிவேட்டில் முறையாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் வடக்கு வள்ளியூர் பேரூராட்சி மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி பணி உத்தரவு வழங்கிட பேரூராட்சி தலைவர் அவர்களால் 09.12.2022 அன்று முன் அனுமதி வழங்கப்பட்டுள்ளதை தொடர்ந்து அதே நாளில் (09.12.2022) பணி உத்தரவும் வழங்கப்பட்டுள்ளது.

பணி உத்திரவின் அடிப்படையில் 10.12.2022–ன் பிற்பகலில் இடித்து அகற்றுதல் பணி துவங்கப்பட்டுள்ளது. இப்பணிக்கான மதிப்பீட்டின்படி பழைய கட்டட சாமான்களின் கிரைய தொகையும் உள்ளடங்கியுள்ளதால் ஒப்பந்தகாரரால் பழைய கட்டிடத்தின் ஆஸ்பொஸ்டாஸ் மற்றும் அதனுடன் கூடிய ஆங்கிள் முதலியவை அகற்றப்பட்டது. எனவே, பேரூராட்சி

நிர்வாகத்தால் ஆங்கிள் மற்றும் ஆஸ்பெஸ்டாஸ் ஷீட்கள் அகற்றபடவில்லை என்ற விபரம் பணிந்து தெரிவிக்கப்படுகிறது.

பேரூராட்சி மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெறப்பட்ட நிலையில் 09.12.2022 அன்று வடக்கு வள்ளியூர் பேரூராட்சி செயல் அலுவலரால் இப்பணிக்கான உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பேரூராட்சி மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி பேரூராட்சி மன்ற தலைவர் அவர்களால் முன்அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து பணி உத்தரவும் வழங்கப்பட்ட நிலையில் இப்பொருள் தொடர்பாக 13.12.2022–ல் நடைபெற்ற பேரூராட்சி மன்றத்தின் சாதாரண கூட்டத்தில் 5வது பொருளாக முன்வைக்கப்பட்டு தீர்மான எண்.211–ன்படி ஏலம் முறையாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

புகார் மனுதாரரான திருமதி.செ.ஜான்சிராஜம் என்பவர் 13.12.2022 அன்று பேரூராட்சி மன்ற கூட்டம் நடைபெறும் போதோ அல்லது அதன் பின்னரோ இது குறித்து யாதொரு விளக்கமும் கோரவில்லை, தனது ஆட்சேபனை எதனையும் தெரிவிக்கவில்லை எனவே, கூட்டத்திற்கு வருகைதந்த அனைத்து உறுப்பினர்களின் ஆதரவுடன் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இதில் அரசுக்கு நிதி இழப்பு ஏற்படும் விதமான சட்டவிரோத செயல் ஏதும் நிகழவில்லை என்ற விபரம் பணிந்து தெரிவிக்கப்படுகிறது. இப்பொருள் தொடர்பான ஆவணங்களின் நகல்கள் விசாரணைக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது” என பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்துள்ளார்.

(3) மனுதாரரும் மற்றும் எதிர்மனுதாரான வடக்கு வள்ளியூர் சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலரும், 31.01.2023 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 23.01.2023 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

(4) மனுதாரர் திருமதி.C.ஜான்சிராஜம் 31.01.2023 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

“திருநெல்வேலி மாவட்டம், வடக்கு வள்ளியூர் பேரூராட்சி வார்டு எண் 2ல் வார்டு உறுப்பினராக உள்ளேன். வடக்கு வள்ளியூர் பேரூராட்சியில் இருந்த பேருந்து நிலையத்தை அகற்றும்போது, அங்கிருந்த பல இலட்சம் பெறுமானமுள்ள ஆஸ்பெஸ்டாஸ் ஷீட் மற்றும் இரும்பு சட்டங்கள் போன்றவை பேரூராட்சியால் அகற்றப்பட்டன. மேலும் பேருந்து நிலையத்தில் பதிக்கப்பட்டிருந்த கிரானைட் கற்களும் அகற்றப்பட்டது. தீர்மானம் நிறைவேற்றாமலும், மன்றத்தின் அனுமதி பெறாமலும் மேற்கண்ட பணிகள் நடைபெற்றுள்ளன. மேற்கண்ட பேருந்து நிலையத்தை அகற்றிட ஏலம் விடப்பட்டதாக பேரூராட்சி தெரிவித்துள்ளது. ஆனால், மேற்கண்ட ஏல விவரம் வார்டு உறுப்பினர் என்ற முறையில் எனக்கு பேரூராட்சியால் தெரியப்படுத்தப்படவில்லை. மேற்கண்ட பேருந்து நிலையத்தை அகற்ற ஏற்பட்ட செலவு விவரங்கள் மற்றும் அகற்றப்பட்ட பொருட்கள் குறித்த விவரங்களை பேரூராட்சியில் கோரியபோது அதற்கான பதிலை எனக்கு சரிவர

வழங்கவில்லை. இது குறித்து மாவட்ட ஆட்சியருக்கும், பேரூராட்சி தலைவரிடமும் புகார் அளித்தும் எவ்வித தகவலும் எனக்கு கிடைக்கப்பெறவில்லை.

எனவே மேற்கண்ட பேருந்து நிலையத்தை அகற்றிட ஏற்பட்ட செலவு விவரங்கள், அகற்றப்பட்ட பொருட்கள் குறித்த விவரங்கள் ஆகியவற்றை குறித்து விசாரித்திட ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

(5) எதிர்மனுதாரான வடக்கு வள்ளியூர் சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலர் 31.01.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

''திருநெல்வேலி மாவட்டம், வடக்கு வள்ளியூர் பேரூராட்சியில் புதிய பேருந்து நிலையம் அமைக்க நிர்வாக அனுமதி பெறப்பட்டு, அங்கிருந்த பழமைவாய்ந்த வணிக வளாகத்துடன் கூடிய பழைய பேருந்து நிலைய கட்டடத்தை அகற்ற கீழ்க்கண்டவாறு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு 8.12.2022 அன்று ஏலம் விடப்பட்டது. அதற்கான முன் அனுமதியும், பணி உத்தரவும் 9.12.2022 அன்று வழங்கப்பட்டது என்கின்ற விவரத்தை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

| | |
|---|---|
| பழைய பேருந்து நிலைய கட்டட பழைய மரங்கள்,ரோலிங் ஷட்டர், ரீப்பர் ஆங்கிள்கள், ஆஸ்பெஸ்டாஸ் ஆகியவற்றின் கிரையத் தொகை | ரூ. 15,99,364/– |
| பழைய கட்டடத்தை அப்புறப்படுத்த உத்தேச மதிப்பீடு | ரூ. 12,28,707/– |
| எஞ்சிய நிகரமதிப்பு | ரூ 3,70,657/– |

13.12.2022 அன்று நடைபெற்ற பேரூராட்சி மன்றத்தின் சாதாரண கூட்டத்தில் மேற்கண்ட பொருள் முன்வைக்கப்பட்டு, தீர்மான எண் 211ன்படி ஏலம் முறையாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது என்பதையும், இதில் பேரூராட்சிக்கு நிதியிழப்பு இல்லை என்பதையும் இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் எனது 24.1.2023 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

(6) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், வடக்கு வள்ளியூர் சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை, வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

திருநெல்வேலி மாவட்டம், வள்ளியூரை சார்ந்த மனுதாரர் திருமதி.C.ஜான்சிராஜம் என்பவர் தனது முறையீட்டு மனுவில் வடக்கு வள்ளியூர் பேரூராட்சியில் இருந்த பழைய பேருந்து நிலையத்தை அகற்றும்போது, அங்கிருந்த பல இலட்சம் பெறுமானமுள்ள ஆஸ்பெஸ்டாஸ் ஷீட் மற்றும் இரும்பு சட்டங்கள் போன்றவை இடித்து அகற்றுவதற்கு நகர் மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றாமல் ரூ.3,75,000/– தொகைக்கு ஏலம் விடப்பட்டுள்ளது என புகாராக தெரிவித்துள்ளார்.

வடக்கு வள்ளியூர் சிறப்புநிலை பேரூராட்சியில் ரூ 12.13 கோடி மதிப்பீட்டில் புதிய பேருந்து நிலையத்தை அமைக்க அரசின் நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. இதனை தொடர்ந்து, பழைய பேருந்து நிலையத்திலிருந்த அகற்றப்படவேண்டிய பழைய கட்டடத்திலுள்ள பழைய சாமான்கள், மரங்கள், ரோலிங் ஷட்டர், ரீப்பர் ஆங்கிள்கள் மற்றும் ஆஸ்பெஸ்டாஸ் ஆகியவற்றின் கிரையத் தொகை ரூ 15,99,364/– என்றும், பழைய பேருந்து நிலையத்திலுள்ள கடைகள் மற்றும் பழைய கட்டடங்களை இடித்து அப்புறப்படுத்த உத்தேச மதிப்பீடு ரூ.12,28,707/– என்றும், மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இதில் ரூ.3,70,657/– எஞ்சியுள்ள தொகையாக மதிப்பீடு செய்யப்பட்டு 07.11.2023 அன்று மதிப்பீட்டு அறிக்கை பேரூராட்சியின் பொறியாளரால் அளிக்கப்பட்டுள்ளதை ஆவணங்களின் மூலம் அறியமுடிகிறது. பேருந்து நிலையத்திலுள்ள கடைகளை இடித்து அப்புறப்படுத்தும் பணிக்கு 08.12.2022 அன்று பகிரங்க ஏலம் விடப்படும் எனவும், அன்று காலை 11.00 மணிவரை ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்படும் எனவும் 29.11.2022 நாளிட்ட பேரூராட்சி ஏல விளம்பரம் மூலம் அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. 08.12.2022 அன்று நடைபெற்ற ஏலத்தில் கூடுதலாக ஏலம் கேட்ட திரு.ஐயப்பன் என்பவரின் ஏலத்தொகையான ரூ 3,75,000/– என்பதை ஏற்றுக் கொண்டு 09.12.2022 அன்று பேரூராட்சி மன்றத்தலைவரின் முன் அனுமதியுடன் இப்பணிக்கான ஆணை செயல் அலுவலரால் 09.12.2022 அன்றே வழங்கப்பட்டு இதற்கான தீர்மானம் பேரூராட்சி மன்ற கூட்டத்திலும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம், 2000 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விதிகளில் விதி 20–(i) (a)–ன் கீழ் ஒப்பந்தப்புள்ளி கோரல் அறிவிப்பு நாளுக்கும், ஒப்பந்தப்புள்ளிகள் சமர்ப்பித்தலுக்கான குறைந்தபட்ச காலம் 15 நாட்கள் என நிர்ணயிக்கப்பட்டுள்ள நிலையில், 10 நாட்களில் ஏலம் நடத்தப்பட்டுள்ளதை ஆவணங்களின் மூலம் அறிய முடிகிறது. இச்செயலானது ஒப்பந்தப்புள்ளி விதி மீறலாகும். இச்செயலினை இம்முறைமன்ற நடுவம் மிகவும் கண்டிக்கிறது.

எனவே, வடக்கு வள்ளியூர் சிறப்புநிலை பேரூராட்சியில் பழைய பேருந்து நிலையத்திலிருந்த அகற்றப்பட வேண்டிய பழைய கட்டடச் சாமான்களின் கிரையத் தொகை ரூ 15,99,364/– எனவும் பேருந்து நிலையத்திலுள்ள கடைகள் மற்றும் பழைய கட்டடங்களை இடித்து அப்புறப்படுத்த உத்தேச மதிப்பீடு ரூ 12,28,707/– எனவும் இதனால் ரூ 3,70,657/– எஞ்சியுள்ள தொகை என பேரூராட்சியால் மதிப்பீடு செய்யப்பட்டு, இப்பணிக்காக ஏலம் விடப்பட்டதில் ரூ3,75,000/– ஏலத் தொகையாக பெறப்பட்டுள்ளது குறித்தும் மற்றும் ஏலம் சம்பந்தமான அனைத்து கோப்புகளையும் பேரூராட்சி இயக்குநர் அலுவலகத்திலுள்ள கண்காணிப்பு பொறியாளர் நிலையில் உள்ள ஒரு அலுவலர் மூலம் ஆய்வு செய்யுமாறும், ஏலம்விடப்பட்டதில் ஏதேனும் முறைகேடுகள் நடைபெற்றிருப்பின் உரிய அலுவலர்கள் மீது நடவடிக்கை

மேற்கொள்ளுமாறும் பேரூராட்சிகளின் இயக்குநரை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

மேற்காணும் ஏலம் விடப்பட்ட நேர்வு குறித்த வருவாய் செலவினங்கள் குறித்து உள்ளாட்சி நிதித்தணிக்கைத் துறை மூலம் தணிக்கை செய்து 3 மாத காலத்திற்குள் அறிக்கையினை பேரூராட்சிகளின் இயக்குநருக்கு அனுப்பி வைக்குமாறு உள்ளாட்சி நிதித்தணிக்கைத் துறை இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

2023 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 15–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திருமதி.C.ஜான்சிராஜம்,
280 D, வீட்டுவசதி வாரியம்,
வள்ளியூர், இராதாபுரம் தாலுக்கா,
திருநெல்வேலி மாவட்டம் – 627 117.

2) செயல் அலுவலர்,
வடக்கு வள்ளியூர் சிறப்புநிலை பேரூராட்சி,
திருநெல்வேலி மாவட்டம்

3) இயக்குநர், உள்ளாட்சி நிதித்தணிக்கை துறை,
571, அண்ணாசாலை, நந்தனம்,
சென்னை 600 035.

4) பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
75, சாந்தோம் நெடுஞ்சாலை, ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி. நகர், சென்னை–28.

5) இணை இயக்குநர் (பொது) மற்றும் ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
75, சாந்தோம் நெடுஞ்சாலை, ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி. நகர், சென்னை – 28. (பெயரிடப்பட்ட உரையில்)

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

21/2/23

செயலாளர்

21/2/23